**செய்தி வெளியீடு எண்: 269** **நாள் : 08.06.2016**

சரித்திர சாதனை படைத்து 6ஆம் முறையாக தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுள்ள, **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு இரா. காமராஜ் அவர்கள் தலைமையில், மாவட்ட வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்கள் மற்றும் நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர்களுடனான மாநில அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் இன்று (08.06.2016) சென்னை, சேப்பாக்கம், எழிலகம் கூட்டரங்கில் நடைபெற்றது.

**மாண்புமிகு அம்மா** அவர்கள், 16.05.2011 முதல் விலையில்லா அரிசி வழங்கும் உன்னதமான திட்டத்தை துவக்கி வைத்து, 1 கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில் ஆணையிட்டார்கள். மத்திய அரசும், பிற மாநில அரசுகளும், இந்திய திருநாட்டின் உச்சநீதிமன்றமும் பாராட்டுகின்ற வகையில் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்ற இத்திட்டத்தின்கீழ், இன்றளவில் 1 கோடியே 91 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர். இதில் 1 கோடியே 72 இலட்சம் அரிசி விருப்ப அட்டை பெற்றுள்ள குடும்பங்களுக்கு 20 கிலோ வரையிலும், வறியவர்களுக்கும் வறியவர்கள் என அடையாளம் காணப்பட்ட 18 இலட்சத்து 87 ஆயிரம் குடும்பங்களுக்கு அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின் கீழ் தலா 35 கிலோ வீதமும் மாதந்தோறும் 3 இலட்சத்து 23 ஆயிரம் மெ.டன் தரமான புழுங்கல் மற்றும் பச்சரிசி விலையில்லாமல் 34 ஆயிரத்து 506 நியாய விலை அங்காடிகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதுதவிர, சர்க்கரை, கோதுமை முதலான பொருட்கள் மானிய விலையிலும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு வகைகள் கிலோ ரூ.30 என்ற விலையிலும், பாமாயில் லிட்டர் ரூ.25 என்ற குறைந்த விலையிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

புதிய குடும்ப அட்டைகள் கோரி பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து 60 நாட்களுக்குள் அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்றும், அச்சடித்து பெறப்பட்டுள்ள குடும்ப அட்டைகளை பெற்றுச்செல்லுமாறு மனுதாரர்களுக்கு தகவல் தெரிவிக்குமாறும் அலுவலர்களை அறிவுறுத்திய மாண்புமிகு அமைச்சர், போலி குடும்ப அட்டைகளை கண்டறிந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கு, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக மாதந்தோறும் 2ஆம் சனிக்கிழமைகளில் நடத்தப்படும் குறைதீர் முகாம்களில், பெறப்படும் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, அன்றைய தினமே தீர்வு காணப்படும் நடைமுறை தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்படி, உணவு பொருள் கடத்தல் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டு வரும் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை பிற மாநில அரசுகளும் பின்பற்ற வேண்டுமென அனைத்து மாநில தலைமை செயலாளர்களுக்கும், மத்திய அரசு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. நடப்பு 31.03.2016 உடன் முடிவடைந்த காலாண்டில் இந்திய அளவில் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் மொத்தம் 68 நபர்களுள் 57 பேர் தமிழ்நாட்டிலும், 7 தெலுங்கானா மாநிலத்திலும், 4 குஜராத்திலும், கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில் திறக்கப்பட்ட 1770 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் 38 கூட்டுறவு சங்கங்கள் மூலம் இதுவரை, 15 இலட்சத்து 97 ஆயிரம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு 99 கோடி ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலன் கருதி தற்போதும் செயல்பட்டு வரும் 335 நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் ஊக்கத்தொகையுடன் தொடர்ந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் **3** மாத பொது விநியோகத் திட்ட தேவைக்கு போதுமான புழுங்கல் மற்றும் பச்சரிசி கையிருப்பில் உள்ளதாகவும், சர்க்கரை, கோதுமை, பருப்பு வகைகள், பாமாயில் முதலான மானிய விலை பொருட்கள், தேவைக்கேற்ப கொள்முதல் செய்யப்பட்டு, அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டு வருகின்றன என்றும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

மாவட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் மண்டல மேலாளர்கள் நியாய விலை அங்காடிகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அத்தியாவசியப் பொருட்கள், ஒதுக்கீட்டு ஆணையின்படி பெறப்பட்டுள்ளனவா என்றும், சீரான முறையில் விநியோகம் நடைபெறுவது, போதுமான, தரமான பொருட்கள் கையிருப்பில் உள்ளனவா என்பதையும், பொது விநியோக திட்ட கிடங்குகளில் இருந்து நகர்வு செய்யப்படும் அரிசி முதலானவை சரியான எடையில் வழங்கப்படுகின்றனவா என்றும் உறுதி செய்து வரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு அம்மா அவர்கள், **புனித ரமலான்** மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிக்க 3000 **பள்ளிவாசல்களுக்கு** 4600 **மெ.டன் தரமான பச்சரிசி வழங்க** உத்தரவிட்டுள்ளார்கள். இதற்கென **மாவட்டங்களில் பெறப்படும் மனுக்கள் அன்றைய தினமே பரிசீலனை செய்யப்பட்டு அரிசி ஒதுக்கீட்டு உத்தரவு வழங்க** நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் மண்டல மேலாளர்களை மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.சிவ்தாஸ்மீனா, இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குநர் திரு.கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப., உணவு பொருள் குற்றப் புலனாய்வுத் துறை இயக்குநர் திரு.கே.இராதாகிருஷ்ணன், இ.கா.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**